கணக்கின்படியும், மாநில அரசினுடைய கணக்கின்படியும், வருங்காலங்களிலே அது குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

பணிமனை

***52596—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாரில் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆழியார் பகுதியிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொள்ளாச்சியில் மூன்று பணிமனைகளும், ஆழியாரிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வால்பாறையில் ஒரு பணிமனையும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மேலும் இப்பணிமனைகளில் கூடுதலாகப் பேருந்துளைப் பராமரித்து இயக்கவும் போதுமான இட வசதி உள்ளது. ஆதலால் ஆழியாரில் கூடுதல் பணிமனை கட்டும் திட்டம் தற்போது இல்லை.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், ஒலிபெருக்கியின் பட்டனை நன்றாக அழுத்துங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பேரவையில் முதலில் பதிலளித்த நான்கு அமைச்சர்களும் "செய்து தருகிறோம்; பரிசீலனை

2010 ஏப்ரல் 5]

செய்கிறோம்" என்று கூறினார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், யார் சென்று கோரிக்கை வைத்தாலும் கட்சி வேறுபாடின்றி செய்து கொடுப்பவர். இன்று இக்கூட்டத் தொடரின் முதல் நாள். எனவே, இல்லை என்று சொல்லாமல், செய்கிறேன் என்று சொல்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். வால்பாறையில் பணிமனை இருக்கிறது. அந்த மலைப் பகுதியிலிருந்து கீழே வருவதற்கு, 45 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டும். ஆழியாரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொள்ளாச்சியில் பணிமனை இருக்கிறது. இரண்டிற்கும் நடுவில் பேருந்துகள் பழுதானால், பழுதுபார்ப்பதற்கு நிச்சயமாகப் பொள்ளாச்சிக்குத்தான் வரவேண்டும். அல்லது 45 கிலோ மீட்டர் தூரமுள்ள வால்பாறைக்குத்தான் வர வேண்டும். ஆகவே, ஆழியாரிலே பணிமனை அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலிருந்து ஆழியாறுக்கு கிட்டத்தட்ட 6 நகரப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலே மூன்றே மூன்று நகரப் பேருந்துகள் மட்டும்தான் ஆழியாரிலே இரவிலே தங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. எனவே அங்கேயிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பணிமனையில் அனைத்து வசதிகளும் இருக்கின்ற காரணத்தினால், அங்கே சென்று பழுதினை சரி செய்துகொள்ள முடியும் என்ற எண்ணத்தில்தான், அங்கே பணிமனை கட்டித் தர தற்போது இயலாது என்று தெரிவித்திருக்கிறோம்.

குறிப்பாக, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் பகுதியிலே பணிமனை வேண்டுமென்று கேட்டு நிறைய கோரிக்கைகள் வந்திருக்கின்றன. சில இடங்களிலே இப்போது ஆரம்பிக்கப்பட்டும் இருக்கின்றன. குறிப்பாக, அரசின் சார்பாக இடமும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொஞ்சம் தொகையும் தருவார்களேயானால், உறுதியாக பணிமனை அமைக்கப்படும். ஏனென்று கேட்டால், எவ்வளவு தூரம் பணிமனை அதிகமாக அமைத்தாலும், எங்களுக்குத்தான் அதிலே வசதி அதிகம்.

[2010 ஏப்ரல் 5

ஏனென்றால், 40 கிலோ மீட்டர் தூரம் செல்வதைவிட 20 கிலோ மீட்டர் சென்று பழுதினை சரிபார்த்தபின் பேருந்து திரும்பி அந்த இடத்திற்கு வர முடியும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் இடமும், நிதியும் ஒதுக்கித் தருவார்களேயானால் பணிமனை அமைத்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல ஆழியாரிலே அறிவுத் திருக்கோயில் என்ற தனியாரிடத்திலே உள்ள மூன்று பேருந்துகள் இரவில் தங்குகின்றன. வால்பாறை மலைப் பகுதியிலிருந்து கீழே வருகின்றவர்கள் தங்குவதற்கு வழியில்லை. பொள்ளாச்சிக்குத்தான் செல்ல வேண்டும். அங்கே, ஓட்டுநர்கள், நடத்துநர்கள்கூட ஓய்வெடுப்பதற்கு, 5 நிமிடங்கள் உட்காருவதற்குக்கூட இடம் இல்லை. அங்கே பேருந்துகள் நடுரோட்டிலேதான், ஆழியாருக்குக் கீழே நிறுத்தி வைக்கப்படுகின்றன. ஆகவே, ஆழியாரிலே பணிமனை என்பது மிகவும் அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோருவார்களேயானால், நான் நிதி ஒதுக்கீடு செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியொதுக்கீடு செய்வதற்கு சட்ட விதியில் இடமில்லை என்று சொல்கிறார்கள். நிதியொதுக்க அரசாணையில் இடமில்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, ஆழியாரிலே பணிமனை அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எந்தெந்த வகையில் செலவு செய்யப்பட வேண்டுமென்று உள்ளாட்சித் துறையின் மூலமாக அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. இதற்கு சிறப்பு அனுமதி பெற வேண்டும். நீங்கள் நிதியை ஒதுக்குவீர்களேயானால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் சிறப்பு அனுமதி பெற்று, அங்கே பணிமனை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியைக் கேட்பதற்கு முன்னாலே ஒரு சிறிய குறையைச் சொல்கிறேன். குறை என்று சொல்லவில்லை. இந்தக் கட்டடத்திலே பேசுகின்ற நேரத்திலே எதிரொலி கேட்கிறது. Echo கேட்கிறது. கொஞ்சம் அழுத்தம் கொடுத்துப் பேசினால் Echo கேட்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நாங்கள் முன்கூட்டியே சொல்லிப் பார்த்துவிட்டோம். அதற்காகத்தான் சொல்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக வர்த்தக நிறுவனங்கள் இருக்கின்ற தொகுதி எங்கள் தி.நகர் தொகுதி. போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் அங்கே பாலங்களைக் கட்டினீர்கள். ஆனால், பெரிதாகப் பயனில்லை. பணிமனையும், பேருந்து நிலையமும் ஒரேயிடத்தில் இருக்கின்றன தி.நகர் தொகுதியிலே. அதிக போக்குவரத்து வாகனங்கள் வந்து போகிற இடம் அந்தப் பகுதி. எனவே, அதை விரிவுபடுத்த வேண்டும். விரிவுபடுத்துவதற்கு இட வசதி இல்லை என்று சொன்னால் அடுக்குமாடி என்கிற அடிப்படையிலாவது அந்தப் பணிமனையையும், பேருந்து நிலையத்தையும் கட்டித் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே சென்னையின் மையப் பகுதியிலே இருக்கின்ற பேருந்து நிலையங்களை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15 கோடி ரூபாயை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கித் தந்து, ஒவ்வொரு பேருந்து நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. தியாகராய நகர் பகுதியிலே இருக்கின்ற அந்தப் பணிமனையும், பேருந்து நிலையமும், அடுக்குமாடியாகக் கட்ட வேண்டும். கீழ்த் தளம் பேருந்துகள் செல்வதற்கும், மேல் தளத்திலே கார்ப்பரேஷன் வாடகை வசூல் செய்வதைப்போல ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, உரிய முறையிலே நபார்டு மூலமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பணிக்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குடமுழுக்கு

***106610—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி வட்டம், சித்தராஜ கண்டிகையிலுள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,